செய்தி வெளியீடு எண்: 531 நாள்: 22.07.2020

# செய்தி வெளியீடு

## கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடை அளித்தவர்களின் விவரங்கள் - 22.7.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க பல்வேறு தீவிர நோய்தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கென முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தொழில் நிறுவனங்கள், அரசு ஊழியர்கள், அரசு சார் நிறுவன ஊழியர்கள், அரசு சார் வாரியங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து **14.5.2020 அன்று வரை மொத்தம் 367 கோடியே 5 லட்சத்து 38 ஆயிரத்து 343 ரூபாய் வரப்பெற்றுள்ளது.**

இதன் தொடர்ச்சியாக, 15.5.2020 முதல் 21.7.2020 வரை 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மனமுவந்து நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்:

- **தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்** 5 கோடி ரூபாய்
- **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக ஊழியர்கள்** 2 கோடியே 53 லட்சத்து 70 ஆயிரத்து 748 ரூபாய்
- **The Hon’ble Portfolio Judge for AG & OT, the Hon’ble Mr. Justice R. Subbiah** 1 கோடியே 86 ஆயிரத்து 639 ரூபாய்
- **ரிஜிஸ்டார் ஜென்ரல், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம்,** 1 கோடியே 50 லட்சத்து 31 ஆயிரத்து 750 ரூபாய்
- **Aquasub என்ஜினியாரிங்** 1 கோடியே 50 ஆயிரம் ரூபாய்
- **தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பணியாளர்கள்** 90 லட்சத்து 29 ஆயிரத்து 763 ரூபாய்
- **லட்சுமி விலாஸ் வங்கி – HRD Department** 44 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய்
- **தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம்** 42 லட்சத்து 47 ஆயிரத்து 371 ரூபாய்
- **RAL Office, Mumbai, Maharashtra** 37 லட்சத்து 52 ஆயிரத்து 338 ரூபாய்

- **தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் சங்கம்** 25 லட்சத்து 73 ஆயிரத்து 790 ரூபாய்
- **யமகா மோட்டார் இந்தியா பிரைவேட் லிமிடெட்** 25 லட்சத்து 26 ஆயிரத்து 938 ரூபாய்
- **புராக்டர் அண்டு கேம்பிள் லிமிடெட்** 25 லட்சம் ரூபாய்
- **தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு பணியாளர்கள்** 16 லட்சத்து 65 ஆயிரத்து 305 ரூபாய்
- **தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்கள்** 16 லட்சத்து 10 ஆயிரத்து 821 ரூபாய்
- **தமிழ்நாடு சிட் ஃபண்ட் கம்பெனிஸ் அசோசியேஷன்** 16 லட்சம் ரூபாய்
- **பாரதியார் பல்கலைக் கழகம்** 15 லட்சத்து 38 ஆயிரத்து 144 ரூபாய்
- **இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் வரும் 37 கோயில்களின் ஊழியர்கள்** 15 லட்சத்து 13 ஆயிரத்து 898 ரூபாய்
- **அகில பாரத மூத்த குடிமக்கள் மற்றும் பென்சனர்கள் கூட்டமைப்பு** 13 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய்
- **கார்க் இண்டஸ்ட்ரீஸ்** 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்
- **தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய ஊழியர்கள்** 11 லட்சத்து 96 ஆயிரத்து 380 ரூபாய்
- **கோயம்புத்தூர் மாவட்ட நீதிமன்றம்** 11 லட்சத்து 81 ஆயிரத்து 500 ரூபாய்
- **தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய காவல் பணி அதிகாரிகள்** 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்
- **தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம் (FEFSI)** 10 லட்சத்து 25 ஆயிரம்
- **அசோஷியேசன் ஆப் இந்தியன் போர்ஜிங் இண்டஸ்ட்ரீஸ்** 10 லட்சம் ரூபாய்
- **தென்னிந்திய ஓட்டல்ஸ் மற்றும் ரெஸ்ட்டாரெண்ட்ஸ் அசோஷியேஷன்** 10 லட்சம் ரூபாய்
- **Educo இந்தியா** 10 லட்சம் ரூபாய்
- **தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சங்கம்** 10 லட்சம் ரூபாய்

**21.7.2020** முடிய முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பெறப்பட்ட மொத்த **தொகை 394 கோடியே 14 லட்சத்து 49 ஆயிரத்து 331 ரூபாய் ஆகும்.**

இந்நிலையில், **கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், ஓரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தமிழ்ச் செல்வன் என்பவரின் மகன் செல்வன் நரேந்திரன் மற்றும் அவரது மகள் செல்வி நிரஞ்சனா** ஆகிய இருவரும் தாங்கள் உண்டியலில் சேமித்து வைத்திருந்த 80 ஆயிரம் ரூபாயை, பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகள் மற்றும் வறுமையில் வாடும் சிறுவர்களுக்கு 40 நாட்களுக்கு உணவு பொருட்கள் வழங்கியுள்ளனர்.

மேலும், சென்னை, அசோக் நகர், அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு பயின்று வரும் **மாணவி செல்வி D.லக்ஷா** என்பவர் தான் சேமித்து வைத்திருந்த சேமிப்பு பணம் 10 ஆயிரம் ரூபாயை கொரோனா நோய்த் தடுப்பு நிவாரணப் பணிக்காக, முதலமைச்சரின் பொது நிவாரணநிதிக்கு வழங்கியுள்ளார்.

இந்த சிறிய வயதில், தன்னலம் பாராமல், அர்ப்பணிப்பு உணர்வுடன் பிறர் நலம் பேணும், மாணவச்செல்வங்களின் செயலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனதார பாராட்டியுள்ளார்.

மேலும், **ஐ.டி.சி நிறுவனம்** சார்பில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் வசிக்கும் வசிக்கும் ஏழை, எளிய குடும்பங்களுக்கு சுமார் 1.59 கோடி ரூபாய் செலவில், தேவையான உணவு பொருட்கள், ரேசன் பொருட்கள், சேனிடைசர் மற்றும் பொது மருத்துவமனை மருத்துவர்களுக்கு உணவு ஆகியவற்றை வழங்கிய ஐ.டி.சி நிறுவனத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேற்கண்ட நாட்களில் நிவாரண நிதி அளித்த நிறுவனங்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள், பொதுத்துறை நிறுவன ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் சங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், தொடர்ந்து அரசுக்கு ஆதரவு அளித்து வரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**